**பலாகல பிரதேச சபைய் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பலாகல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் பலாகல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமத்திற்கு கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண நிர்வாக நிறுவனங்களுக்கான இலங்கை அரச துறை அரச கணக்கீட்டு நியம இலக்கம் 5.2 இற்கு முரணாக சபையின் உணவகத்தில் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட தொகையானது விற்பனை விலைக்கு ரூபா.125,742 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படு கின்றது என்பது. | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டெழும் செலவு அல்லாதவற்றுக்கு மாகாண நிர்வாகத் திணைக்களத்திடம் இருந்து மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா.244,293 குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்யப்பட்டுள்ளது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் சுற்றாடல் அனுமதிப் பத்திரக் கட்டண வருமானம் ரூபா.5,175 குறைவாகவும் சுற்றாடல் அனுமதிப் பத்திர பரீட்சிப்புக் கட்டண வருமானம் ரூபா.5,175 கூடுதலாகவும் விரிவான வருமானக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டில் வாடகை வருமானம் ரூபா.127,137 குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சபையின் சேகரிப்புக்கு அமைய வித்தியாசம் இல்லை என்பது. | -மேற்படி- |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டு தொடக்கம் காணப்படும் ரூபா.66,800 நிலுவை கடை வாடகை வருமானம் மீளாய்வாண்டில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் பரிமாற்ற கொடுக்கல் வாங்கல்களில் பெறப்பட வேண்டியவை என்பதன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டில் சரளைக் கற் பாதை திருத்த வேலை செலவுகள் ரூபா.258.485 இனால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் ரூபா.110,245 பெறுமதியான நூலக புத்தகங்களைக் கொள்வனவு செய்தல் விரிவான வருமான கூற்றில் நலன்புரி செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | நூலகப் புத்தகங்கள் நடைமுறை சொத்தாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (எ) | நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டுக்கு உரிய வட்டி வருமானம் ரூபா.22,329 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | சரியான வருமானத் தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஏ) | 2021 ஆம் ஆண்டில் கட்டடங்கள் ரூபா.3,961,169 இனாலும் வீதி ரூபா.568,140 இனால் அதிகமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டில் தேய்மானம் மற்றும் தேய்மான ஒதுக்கம் என்பன ரூபா.155,843 கூடுதலாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மீளாய்வாண்டில் காசுப் பாய்ச்சல் கூற்றில் சொத்துக்கள் கருவிகள் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் காசுப் பாய்ச்சலில் ரூபா.6,465,293 கடன் கொடுத்தோர் மீதியும் கிடைக்கப் பெற்ற மூலதன செலவுகள் காசுப் பாய்ச்சலில் ரூபா.6,465,293 கடன்படுநர் மீதியும் வருடத்தில் பெறுகை மற்றும் கொடுப்பனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | திரண்ட அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தால் வித்தியாசம் காட்டப்படுகின்ற போதிலும் கணக்கீடு சரியாக செய்யப்பட்டுள்ளது என்பது. | காசு பாய்ச்சல் கூற்றில் பண வருகைகள் மற்றும் பணக் கொடுப்பனவுகள் மட்டும் குறிப்பிடப்படுதல் வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற மூலதன செலவு மானிய பெறுமதி ரூபா.70,652 கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஓ) | கொங்கிரீட் செயல்திட்டத்தில் மீளாய்வாண்டில் நலன்புரி அடிப்படையில் ரூபா.109.425 பெறுமதியான உற்பத்தி வழங்கப்பட்டு இருந்த போதிலும் அதனைக் கைவிட்டு இலாப நட்டம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஔ) | சபையினால் வேறு தரப்பினருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டு இருந்த போதிலும் அது தொடர்பாக நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

**1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 கணக்குகளில் நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்ட பெறுமதி என்பவற்றுக்கு இடையே ரூபா.1,316,186 வித்தியாசம் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | நேரொத்த அறிக்கையுடன் இணக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுக்கு அமையும் தேறிய சொத்துக்கள் / குவியல்கள் ரூபா.317,456,134 எனவும் மற்றும் குவியல்களின் வேறுபாட்டு கூற்றில் அது ரூபா.310,781,899 எனவும் காட்டப்பட்டு இருந்ததால் ரூபா.6,674,235 வித்தியாசம் காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா.7,650,312 பெறுமதியான 05 கணக்கு விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்குப் போதிய அளவிலானதும் மற்றும் பொருத்தமானதுமான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2009 ஜூலை 17ஆம் திகதி இடப்பட்ட அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 09/2009(i) | உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் வரவு மற்றும் வெளியேறும் நேரங்களைக் குறிப்பதற்கு விரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2023 பெப்ரவரி மாதம் தொடக்கம் விரல் அடையாள இயந்திரத்தைப் பயன்படுத்தி உள்ளேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2015 மார்ச் 31 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 02/2015 கொண்ட அரச நிதி ஒழுங்கு விதி சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தி | சபைக்குச் சொந்தமான செயலற்ற நிலையில் காணப்படும் 11 வாகனங்களைத் திருத்துதல் அல்லது அவ்வாறு செய்ய முடியாதாயின் அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதி கூற்றுக்கு அமைய 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா.6,674,235 ஆக இருந்தத்துடன்

அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டில் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா.10,159,871 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான வழி | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீத வரி மற்றும் வரி | 1,559,450 | 1,632,460 | 1,648,660 | - | 1,474,650 | 1,620,625 | 1,604,425 | 16,200 |
| (ii) | வாடகை | 2,064.960 | 2,137,903 | 2,257,953 | 1,390,800 | 1,145,000 | 2,083,450 | 680,800 | 1,510,850 |
| (iii) | அனுமதி பத்திர கட்டணம் | 306,995 | 267,175 | 268,175 | - | 264,000 | 281,100 | 280,100 | 1,000 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 34,132,300 | 13,605,759 | 10,308,586 | 8,136,239 | 37,330,800 | 27,224,902 | 34,219,487 | 4,839,066 |
| | | 38,063,705 | 17,643,297 | 14,483,374 | 9,527,039 | 40,214,450 | 31,210,077 | 36,784,812 | 6,367,116 |

### 2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(i) பிரிவின் பிரகாரம் சபையின் அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாக புப்போகம நகரம் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு வீத வரி அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | வீத வரியினை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**(ஆ) வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | மோட்டர் கிரேடர் மற்றும் மண் சமப்படுத்தும் இயந்திரம் என்பவற்றை வாடகைக்கு வழங்குவதனால் 01 வருடத்துக்கும் 05 வருடத்திற்கும் இடைப்பட்ட காலம் தொடக்கம் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலுவை வருமானம் ரூபா.1,902,300 ஆகும். இந்த நிலுவை வருமானத்தில் அதிக தொகையானது பிரதேச சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களிடம் இருந்து பெறப்பட வேண்டி இருந்தது. | -மேற்படி- | நிலுவை வருமானம் அறவிடப்படுதல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் 1-2 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் தொடக்கம் அறவிடப்படாது காணப்பட்ட கடை வாடகை ரூபா.161,750 உம் 1 - 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் தொடக்கம் அறவிடப்படாது காணப்பட்ட இறைச்சிக் கடை டெண்டர் வருமானம் ரூபா.1,295,850 உம் ஆகும். | -மேற்படி- | -மேற்படி- |

**(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| | அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள விளம்பர பலகை மற்றும் தொலைபேசி பரிமாற்ற கோபுரங்கள் என்பன தொடர்பில் முறையான ஆய்வுகள் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | -மேற்படி- | ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**(ஈ) ஏனைய வருமானங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | கொங்கிரீட் உற்பத்தி செயல் திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பிளொக் கல் மற்றும் கொங்கிரீட் வளையங்கள் என்பவற்றுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய ரூபா.210,698 தொகை அறவிடப்படாது இருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்படுதல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் 1 தொடக்கம் 2 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் தொடக்கம் அறவிடப்படாது காணப்பட்ட ரூபா.954,288 தொகையானது 03 பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய மீதிகள் ஆகும். | -மேற்படி- | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது நெடுஞ்சாலைகள் மற்றும் கிளை வீதிகள் தொடர்பான காரணிகளை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், மக்களின் நன் நடத்தை, வசதிகள் மற்றும் நலன் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டி இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

#### 3.1.1 கால்நடை அறுத்தல் கூடத்திற்கான வசதிகளை வழங்காது இறைச்சி விற்பனை நிலையங்களை நடத்திச் செல்வதற்கு இடமளித்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கால்நடை அறுத்தல் கூடத்தினை நிர்மாணிப்பதற்கு சபைக்கு காணியொன்று ஒதுக்கப்பட்டு இருந்த போதிலும் கால்நடை அறுத்தல் கூடத்தினை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது நெல்லியகம, பலலுவெவ மற்றும் புப்போகம ஆகிய இடங்களில் இறைச்சி விற்பனை நிலையங்கள் நடாத்தப்பட்டு வருகின்றது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | கால்நடை அறுத்தல் கூடத்தினை நிர்மாணிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1988 ஒகஸ்ட் 23 ஆம் திகதி இடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்ட வர்த்தமானி அறிவித்தலின் 32 துணைச் சட்ட 09 ஆம் பிரிவின் பிரகாரம் விற்பனை செய்வதற்குப் பொருத்தமானது என சபையின் முத்திரை இட்டு இறைச்சியைப் பரிசோதனை செய்வதற்காக ஒரு கிலோ கிராமுக்கு ரூபா.10 இற்குக் குறையாத தொகை சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காததுடன் பொது சுகாதார பரிசோதகரினால் பரிசோதனை செய்யப்பட்ட இறைச்சி மற்றும் விலங்குகள் தொடர்பான விபரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டத்தின் பிரகாரம் செயல்படுதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பொதுமக்களுக்கு பொருட்களை விநியோகிக்கும் வேலைத் திட்டத்திற்காக சபையினால் அறவிடப்பட வேண்டிய ரூபா.450,044 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் . |

### 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் எழுதுவினைஞரின் கூற்றுக்கு அமைய 2022 ஆம் ஆண்டில் கிரவர் கியூப் 335 இற்காக ரூபா.3,182,000 செலுத்தியதாகக் குறிப்பிட்டிருந்த போதிலும் கொடுப்பனவு வவுச்சருக்கமைய கிரவர் கியூப 501 இற்காக ரூபா.3,507,000 செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | நேரொத்த அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையில் 06 பதவிகளுக்குரியதான 07 வெற்றிடங்களும் மற்றும் ஒரு பதவிக்கு உரியதான மேலதிக உத்தியோகத்தரும் காணப்படுகின்றது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மேலதிக ஊழியர்களை வேறு நிறுவனங்களுக்கு விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | ஊழியர் கடன் கணக்கிற்கு உரியதாக மூன்று ஊழியர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.96,456 தொகை அறுவிடப்பட்டு இருக்கவில்லை. | -மேற்படி- | அறவிடப்படுதல் வேண்டும். |

**3.5 செயலற்ற அல்லது குறை பயன்பாடுடைய சொத்துக்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இன்டர்லொக் கல் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் செயல் திட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டில் இயந்திரத்தினைக் கொள்வனவு செய்வதற்கு மற்றும் கட்டடத்தினை அமைப்பதற்காக ரூபா.8,829,079 கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்த போதிலும் இன்டர்லொக் கல் உற்பத்தி செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இருக்காததால் அந்த சொத்து செயலற்று காணப்படுகின்றது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சொத்துக்களை செயல்பாடின்றி வைத்திருக்காது வருமானம் ஈட்டுவதற்குத் தேவையான வழி வகைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஹிங்குருவெவ பிரதேசத்தில் ரூபா.19,741,026 செலவில் நிர்மாணிக்கப்பட்ட பல்தேவைக் கட்டடம் மற்றும் கிணறு என்பன செயலற்றுக் காணப்படுகின்றது. | -மேற்படி- | இந்த சொத்தினைப் பாதுகாப்பதற்கு மற்றும் பயன்படுத்துவதற்குத் தேவையான வழிவகைகளை உடனடியாக எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள இயற்கை நீர் ஊற்றின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் நீரினை போத்தலில் அடைத்து விற்பனை செய்தல் 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டு இருந்தது. ஊற்று நீரினை குடிநீர் போத்தலில் அடைத்தல் பொருத்தமற்றது எனவும் நீர் ஆதாரம் காணப்பட வேண்டும் எனவும் சுகாதார அமைச்சினால் தெரிவிக்கப்பட்டிருந்ததால் அந்த நீர் போத்தல் விற்பனை செய்தல் செயல் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. அதனால் இந்த செயல் திட்டத்திற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா.990,785 பெறுமதியான 25978 வெற்று பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் ரூபா.88,233 பெறுமதியான சேகரிப்பு பொருட்கள் என்பன 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் எஞ்சி இருந்தன. | -மேற்படி- | செயல் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியக்கூறு ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இருக்கும் தண்ணீர் போத்தல்களை விற்பனை செய்வதற்கு தேவையான வழிமுறை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான புல் வெட்டும் இயந்திரத்தில் திருத்தவேலை மட்டும் செய்யப்பட வேண்டி இருந்த போது டிராக்டருடன் வழங்கப்பட்டு இருந்ததால் அது 2022 ஒக்டோபர் 12 ஆம் திகதி தொடக்கம் தனியார் கராஜில் நிறுத்தப்பட்டு இருந்ததுடன் சிறிய அளவிலான நில சமப்படுத்தும் இயந்திரமும் 2021 ஆம் ஆண்டு தொடக்கம் கலேவெல தனியார் நிறுவனம் ஒன்றில் நிறுத்தப்பட்டு இருந்தது. இந்த இயந்திரங்களைத் திருத்தி சபைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | இந்த வாகன திருத்த வேலையைப் பூர்த்தி செய்து சபைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 3.7 கொள்முதல் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் வேலைகள் மற்றும் சேவைகள் என்பவற்றுக்காக கேள்வி மனு கோரல் மேற்கொள்ளப்படாது. ரூபா.1,370,410 தொகைக்கு நேரடியாகக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | விலை மனு பெற்றுக் கொள்வதற்கு செயல்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கழிவுகளை அகற்றுவதற்காக சபையினால் குறிப்பிட்ட ஒரு இடத்தினைத் தெரிவு செய்து இருக்காதால் மீளாய்வாண்டில் அதிகார பிரதேசத்தில் கழிவுகளை சேகரிப்பதை சபை தவிர்த்து இருந்தது. | கழிவுகளைப் பெற்றுக் கொள்வது நிறுத்தப்பட்டுள்ளதுடன் குறித்த நபர்களின் மூலம் கழிவுகளை மீள் சுழற்சி செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | முறையான கழிவு முகாமைத்துவ செயல்முறை ஒன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும். |